

விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் அருப்புக்கோட்டை மேலரதவீதியில் பொதுக்குழு உறுப்பினர் சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. கே.கே.எஸ்.எஸ். ஆர்.ஆர்.ரமேஷ் வரவேற்புரை வழங்கினார். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ஊடகவியளாளர் செந்தில்வேல், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாரியப்பன் கென்னடி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். உடன் இராஜபாளையம் சட்ட மன்றத் தொகுதி தங்கப்பாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தனுஷ் எம்.குமார், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் வி.பி.ராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பாலமேட்டில் நடைபெற்ற ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் கழகத்தினர் மற்றும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள் உடன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் இன்பா, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் புதூர் ராதாகிருஷ்ணன், சின்ன மாரிமுத்து, செல்வராஜ், மும்மூர்த்தி, காசி விஸ்வநாதன், அன்பு ராஜ், நவநீத கண்ணன், முருகேசன், ராதாகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் இரா. ரமேஷ், நகர் மன்ற உறுப்பினர்கள் கு.தவமணி, சுரேஷ், அதிர்ஷ்ட மணி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. சார்பில் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் அரன்மனை முன்பு மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்து கொண்டு பேசுகையில்: இக்கூட்டத்தில், பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் முருகேசன், முன்னாள் அமைச்சர்கள் சந்தியமூர்த்தி, சுந்தராஜன்,மாநில இளைஞரணி துணைச்செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, முன்னாள் மாவட்ட செயலாளர் சுப தா திவாகரன், மாவட்ட துணைச் செயலாளர் கருப்பையா, நகர் மன்ற தலைவர் கார்மேகம், மிசா அகமது தம்பி, துணைத்தலைவர் பிரவீன் தங்கம், மற்றும் மாநில,மாவட்ட,நகர ,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மானம் ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் வள்ளியூர் கலையரங்கில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. உடன் கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ. மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம், சித்திக், பிரபாகரபாண்டியன், மாநில நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், தொகுதி பார்வையாளர் சிவராஜ், துணைச் செயலாளர்கள் மைக்கேல், தமயந்தி, நம்பி, ஒன்றியச் செயலாளர்கள் செல்வக் கருணாநிதி, ராஜன், சுடலைக்கண்ணு, ஜோசப் பெல்சி,சுபாஷ் சந்திரபோஸ், பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம், அணி அமைப்பாளர்கள் செல்வ சூடாமணி, ஜான்ரபீந்தர், மல்லிகா அருள், பிரேம் ஆனந்த் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோ. வாசுதேவன்

## செப்டம்பர் 23 (2023)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

செவ்வாய்ப்பேட்டை கிளை செயலாளராகவும், அவைத்தலைவராக பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறவழிப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## நாமக்கல் மேற்கில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

நாமக்கல். செப். 23–

நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக சார்பில் பரமத்தி வேலூர் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் பரமத்தி வேலூர் அண்ணா சிலை அருகில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி தலைமை தாங்கினார். வேலூர் பேரூர் கழக செயலாளர் பி.முருகன் வரவேற்றார்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் நடனசபாபதி, அன்பழகன், மயில்சாமி, சாந்தி, ராஜாராம், ஜிஜேந்திரன், செல்வராஜ், ரங்கசாமி, வெங்கடாஜலம், திருநாவுக்கரசு, சோமசேகர், சிவக்குமார், வேலுமணி, ரவிச்சந்திரன், இந்திராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினரும், மாநில வழக்கறிஞர் அணி இணை செயலாளருமான இ.பரந்தாமன் சிறப்புரையாற்றி, ஓரணியில் தமிழ்நாடு தீர்மான உறுதிமொழியை வாசிக்க கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

இக்கூட்டத்தில் கழக சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் ஜே கே கே எஸ் மாணிக்கம், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெப்படை செல்வராஜ், பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் உமாராணி, மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ரியா, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பரமானந்தம்,

ஒன்றிய செயலாளர்கள் தனராசு, சாமிநாதன், சரவணகுமார், சுப்பிரமணியம், தங்கவேல், சண்முகம், வட்டூர் தங்கவேல், தாமரைச்செல்வன், பழனிவேல், செல்வராசு, இளங்கோவன், செல்வம், நாச்சிமுத்து, நகர செயலாளர்கள் குமார், கார்த்திகேயன், நடேசன், ஞானசேகரன், விஜய் கண்ணன்

பேரூர் கழகச் செயலாளர்கள் திருமலை, ரமேஷ் பாபு, கருணாநிதி, பெருமாள் (எ, முருகவேல், சூர்யா இராமலிங்கம், கார்த்திக் ராஜ், ராமமூர்த்தி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகில் பிரபாகரன் நன்றி கூறினார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் ‘தமிழ்நாட்டை தலைகுனியே விடமாட்டேன்’ ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்ப பொதுக்கூட்டம் மதுரை புதூர் பகுதியில் வட்டச் செயலாளர் புதூர் வேலு, பகுதி செயலாளர் புண்ணியமூர்த்தி ஆகியோர் தலைமையில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி கல்யாணம் மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் வ. வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பெ. குழந்தை வேலு, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாணவர் மாவட்டச் செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. உறுதிமொழி ஏற்று சிறப்புரையாற்றினார். உடன் மா.ஜெயராம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், இளைஞர் அணி சவுந்தர்ராஜன் ஏ.கே.ஆறுமுகம் மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.